பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 04 2024 **FRIDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. வாக்கு சதவீதம் குறைவாக பதிவான வாக்குச்சாவடிகளில் அதனை அதிகரிப்பதற்கென சிறப்பு செயல் திட்டத்தை வகுக்குமாறு தேர்தல் ஆணையம், அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

2. நாட்டு நலனில் அக்கறையின்றி எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி செயல்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

3. மத்தியில் ஆட்சிப்பொறுப்பேற்றால் விவசாயிகள் நலனை பாதுகாக்கும் வகையிலான ஏற்றுமதி, இறக்குமதி கொள்கை வகுக்கப்படும் என்று காங்கிரஸ் கூறியுள்ளது.

4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஜெர்மன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் வாக்கு சதவீதம் குறைவாக பதிவான வாக்குச்சாவடிகளில் அதனை அதிகரிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் தலைமையில் நடைபெற்ற காணொலி வாயிலான மாநாட்டில், மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் பங்கேற்றனர்.

2019 மக்களவைத் தேர்தலில் தேசிய சராசரி வாக்கு சதவீதமான 67-க்கும் குறைவாக வாக்குகள் பதிவான 266 தொகுதிகளில் அதனை அதிகரிப்பதற்கென செயல் திட்டம் தொகுதி வாரியாக வகுக்கப்பட வேண்டும் என்று திரு ராஜீவ்குமார் அறிவுறுத்தினார்.

இந்த 266 மக்களவைத் தொகுதிகளில் 215 ஊரகப்பகுதிகளிலும், 51 நகர்ப்புற பகுதிகளிலும் உள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறைந்த வாக்குப்பதிவிற்கான காரணங்களை கண்டறிந்து அவற்றை களைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வாக்குச்சாவடி வாரியாக இதற்கான திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

வாக்குச்சாவடி மையங்களில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துவது, வாக்காளர்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான நிகழ்ச்சிகளை நடத்துவது போன்றவை வாக்குச்சதவீதத்தை அதிகரிக்க உதவிடும் என்றும் அவர் கூறினார்.

இதற்காக சமூக வலைதளங்களை பயன்படுத்த வேண்டும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் கேட்டுக்கொண்டார்.

கடந்த மக்களவைத் தேர்தலின்போது 29 கோடியே 70 லட்சம் வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை செலுத்தவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் இந்த பகுதிகளில் வாக்கு சதவீதத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் உரிய பலனை அளித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இளம் வாக்காளர்களை கவருவதற்கென பிரபலமானவர்களை தேர்தல் தூதர்களாக நியமிக்க வேண்டும் என்றும் திரு ராஜீவ்குமார் கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தின் சார்பில் தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்ய பிரத சாஹூ, மற்றும் உயரதிகாரிகள் இந்த மாநாட்டில் காணொலி வாயிலாக பங்கேற்றனர்.

இதுபோன்ற மாநாடு நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 168 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும்பட்சத்தில் அந்த தொகை மற்றும் பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

நாட்டு நலனில் அக்கறையின்றி எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி செயல்படுவதாக பிஜேபி-யின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ராஜஸ்தானில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், பிஜேபி தலைமையிலான கூட்டணியை பொறுத்தவரை, நாட்டு நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருவதாக கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக அனைத்துத்துறைகளும் விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சியை கண்டு, உலகமே வியப்படைவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மத்தியில் ஆட்சிப்பொறுப்பேற்றால், விவசாயிகளுடன் கலந்தாலோசித்து புதிய ஏற்றுமதி, இறக்குமதி கொள்கை வகுக்கப்படும் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அக்கட்சி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்திற்கான ஊதியம் 400 ரூபாயாக உயர்த்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்திற்கு தேவையான அனைத்து பொருட்களுக்கும் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் காங்கிரஸ் அந்த பதிவில் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் போதைப்பொருட்களின் புழக்கம் அதிகரித்துள்ளதாக தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சென்னையில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றார்.

அத்தியாவசியப்பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய – மாநில அரசுகள் தவறிவிட்டதாகவும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

<<<<<<<>>>>>>

தொகுதி வாரியாக எமது செய்தியாளர்கள் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது சேலம் மக்களவைத் தொகுதி

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு வெயிலின் தாக்கம் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

வட தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் 39 முதல், 41 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் பதிவாகக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோர மாவட்டங்களுக்கு உட்பட ஒரு சில பகுதிகளில் நாளை மறுநாள் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரியில் மாணவிகள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு மனித சங்கிலியை ஆட்சியர் திருமதி சாந்தி இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

மதுரை மாவட்டத்தில் 85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தபால் வாக்கு பதிவு செய்வதற்கான ஆலோசனைக்கூட்டம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் இன்று நடைபெற்றது.

--------------------------

கோவையில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் திருநங்கைகள் வரைந்த விழிப்புணர்வு கோலங்களை ஆட்சியர் திரு கிராந்திகுமார் இன்று பார்வையிட்டார்.

---------------------

நாமக்கல் மாவட்டத்தில் பதற்றமான வாக்குச்சாடிகளில் பணிபுரிய உள்ள நுண்பார்வையாளர்களுக்கான பயிற்சி முகாம் இன்று நடைபெற்றது.

---------------------

திருவண்ணாமலையில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்வது குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன் இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

சேலம் மாவட்டத்தில் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு இருசக்கர பேரணி இன்று நடைபெற்றது.

---------------------

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த குற்றாலநாதர் ஆலயத்தில் சித்திரை விஷு திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஜெர்மன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-5, 11-8, 9-11, 11-9 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் **George Parker** –ஐ வென்றார்.

--------------------

கஜகஸ்தான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Anupama Upadhyaya,** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-23, 27-25, 21-18 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Devika Sihag** –ஐ வென்றார்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், **Isharani Baruah 11-21, 21-16, 21-14** என்ற செட் கணக்கில் **Tanya Hemanth** –ஐ வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் பரத் ராகவ்-வும், **Tharun Mannepalli** –யும் காலிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று, அரையிறுதிக்கு முன்னேறினர்.

**<<<<<<<END>>>>>>**